[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூலை 2

மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவை உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி செயல்படுகின்றதா என்ற விவரம் தெரிந்த பிறகு, நாம் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அதற்குத் தேவையான மேல் நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–10

3. கவன ஈர்ப்பு

களக்காடு, முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் இடைத்தாங்குப் பகுதிகள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஆஸ்டின், திரு. என். சுரேஷ் ராஜன், திரு. த. மனோ தங்கராஜ், திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. செ. ராஜேஷ் குமார், திரு. வி.எஸ். காளிமுத்து, திரு. எச். வசந்தகுமார், திரு. ஆர். கணேஷ் மற்றும் திரு. ச. பாண்டி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின். ஒரு கேள்வியை நீங்கள் கேட்கலாம்; காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒருவர் ஒரு கேள்வி கேட்கலாம்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "களக்காடு, முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் இடைத்தாங்குப் பகுதிகள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூலை 2] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

அறிக்கை

தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் வழிகாட்டுதல்படி ஒவ்வொரு புலிகள் காப்பகத்திற்கும் இடைத்தாங்குப் பகுதி (Buffer Zone) அறிவிக்கை செய்யப்பட வேண்டும் என்பது ஒரு நிபந்தனையாகும். அதனடிப்படையில் தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணைய கடித எண் 1–20/93–PT (Part), நாள் 18–1–2011–ல் களக்காடு, முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் இடைத்தாங்குப் பகுதிகளாக (Buffer Zone) 716.107 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை [(குற்றாலம் காப்புக்காடு–3,528 ஹெக்டேர், கன்னியாகுமரி வன உயிரினச் சரணாலயத்தின் (பகுதி)–20,136 ஹெக்டேர், களக்காடு, முண்டந்துறை புலிகள் காப்பகத்தை ஒட்டிய 5 கிலோ மீட்டர் கிழக்கு எல்லைப் பகுதி–47,946.70 ஹெக்டேர் மற்றும் மண்பொத்தை காப்புக்காடு–503 ஹெக்டேர் மற்றும் கொழுந்துமலை காப்புக்காடு (பகுதி) 453.5 ஹெக்டேர்)] உள்ளடக்கி களக்காடு, முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் வன உயிரினப் (பாதுகாப்பு) சட்டம், 1972, பிரிவு 38 V–ன்படி அங்கீகரிக்கப்பட்டது.

அதனடிப்படையில் மாநில அரசால் அரசாணை எண் 201, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம் 5) துறை, நாள் 13–8–2012–ல் 706.542 சதுர கிலோ மீட்டர் பரப்பளவினை இடைத்தாங்குப் பகுதியாக அறிவிக்கை செய்யப்பட்டது. இதில் மண்பொத்தை காப்புக்காடு (503 ஹெக்டேர்) மற்றும் கொழுந்துமலை காப்புக்காடு (453.5 ஹெக்டேர்) ஆகியவை நீக்கி அறிவிக்கை செய்யப்பட்டன.

மேலும், புலிகள் காப்பக இடைத்தாங்குப் பகுதி அறிவிக்கை செய்யப்படுவது, பொது மக்களை எவ்விதத்திலும் பாதிக்காது. அதே சமயம், இந்த இடைத்தாங்குப் பகுதியில் மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகள்மூலம் அவர்கள் அதிகம் பயன்பெறுவது உறுதி செய்யப்படுகிறது. ‘இடைத்தாங்குப் பகுதிகள் பல்வகை உபயோகப் பகுதிகள்’ என்பதால், புலிகள் காப்பக நிருவாகத்தில், பல்வேறு துறைகளின் பணிகளையும் ஒருங்கிணைப்பதன்மூலம், இப்பகுதியில் வாழும் பொது மக்களின் வாழ்வாதார வாய்ப்புகளுக்கு, வனப் பகுதியைச் சார்ந்து இருக்காமல் பல்வேறு மாற்றுத் தொழில்கள் மற்றும் வருவாய்ப் பெருக்க நடவடிக்கைகளை, மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்த இயலும்.

இதனால் பொது மக்களுக்கு கிடைக்கக்கூடிய நன்மைகள் வருமாறு:

i. தங்களது வாழ்வாதாரத்துக்கு வனப் பகுதியை நம்பியிருக்கும் பொது மக்களுக்கு மாற்று வேலை மற்றும் சுய தொழில் வாய்ப்புகள் உருவாக்குதல்.

ii. சூழல் மேம்பாடு மற்றும் பொது மக்களுடன் இணைந்து தயாரிக்கப்படும் கிராம அளவிலான குறுந்திட்டச் செயலாக்கம்.

iii. வருவாய்ப் பெருக்கம், சமுதாய வளர்ச்சி, சூழல் சுற்றுலா முதலான வழிவகைகள்மூலம் சுற்றியுள்ள வனப் பகுதிகளை மட்டுமே நம்பியிருக்காமல், பல்வேறு வாழ்வாதார நடவடிக்கைகள் எடுக்கப்படுதல்.

iv. இப்பகுதியில் வாழும் மக்களின் ஒத்திசைவு பெற்று சூழல் மேம்பாட்டுக் குழுக்கள் அமைத்து வன உயிரின மேலாண்மைச் செயலாக்கம்.

v. மாவட்ட நிருவாகத்தின் ஒருங்கிணைப்புமூலம் பல்வேறு துறைகளின் பணிகளையும் ஒருமுகப்படுத்தி கிராம வளர்ச்சியினை ஏற்படுத்துதல்.

vi. வன உயிரினங்களால் ஏற்படும் கால்நடை உயிரிழப்புகளுக்கு உரிய இழப்பீடு உடனுக்குடன் வழங்குதல்.

vii. விவசாய நிலங்களில் வன உயிரினங்களால் பயிர்ச் சேதம் ஏற்பட்டால், அதற்கான இழப்பீடு உடனுக்குடன் வழங்குதல்.

viii. சூழல் மேலாண்மைமூலம் நிலப் பயன்பாட்டை மாற்றி உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதுடன் வன உயிரினப் பராமரிப்பினையும் சேர்த்து செயல்படுத்துதல்.

கன்னியாகுமரி வன உயிரினச் சரணாலயத்தின் (பகுதி) 20,136.00 ஹெக்டேர் பரப்பு இடைத்தாங்குப் பகுதியாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இச்சரணாலய இடைத்தாங்குப் பகுதிக்குள், வீரப்புலி காப்புக் காட்டுப் பகுதி 12,524.20 ஹெக்டேர் பரப்பும், கிளமலை காப்புக் காட்டுப் பகுதி 2,577.00 ஹெக்டேர் பரப்பும் அமைந்துள்ளன. மேலும், சுருளகோடு பகுதி ஒரு கிராமம் ஆகும். இக்கிராமம் காப்புக்காட்டின் எல்லைப் பகுதிக்கு அருகில் அமைந்துள்ளது. காப்புக்காட்டிற்குள் அமைந்துள்ள எஸ்டேட்டுகளுக்கு சுருளகோடு கிராமப் பட்டா எண்கள்

வழங்கப்பட்டுள்ளன. இக்கிராமப் பகுதி இடைத்தாங்குப் பகுதி எல்லைக்குள் வரவில்லை.

மேற்காண் காரணங்கள் மற்றும் நடவடிக்கைகளால் தற்போது களக்காடு, முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் அருகில் மக்கள் பாதிக்கப்படும் நிலையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், நீங்கள் ஒரு கேள்வி கேளுங்கள். காங்கிரஸ் கட்சி சார்பாக யாராவது ஒருவர், ஒரு கேள்வி கேட்கலாம்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். இந்த அரசாணையினால் அந்தப் பகுதி மக்களுக்குப் பாதிப்பு இல்லை, அதனால் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன என்று குறிப்பிடப்பட்டு, அதற்காகப் பல்வேறு உதாரணங்களையெல்லாம் குறிப்பிட்டு, அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்தக் கருத்துகள் நடைமுறைக்கு சரியாக வராது. ஏனென்று சொன்னால், களக்காடு, முண்டந்துறை புலிகள் காப்பகத்தின்கீழ் கிட்டத்தட்ட 201.36 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள குமரி மாவட்ட வனப் பகுதி 13–8–2012–ல் வெளியிடப்பட்ட அரசாணை 201–ன்படி இணைக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரியில் உள்ள பாதுகாக்கப்பட்ட காடுகள் மிகவும் தொன்மை வாய்ந்த காடுகளாகும். இந்தப் பகுதியில்தான் பாரம்பரியமாக பழங்குடியின மக்கள் மற்றும் ஆதிவாசிகள் எல்லாம் வாழ்ந்து வருகின்றார்கள். புலிகள் காப்பகம் என்று அறிவித்துவிட்டால், அந்த மக்களுடைய பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிடும். அதுமட்டுமல்ல, நம்முடைய அரசு இரப்பர் கழகத்திற்குச் சொந்தமான 5 டிவிஷன்கள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் இரப்பர் மற்றும் கிராம்புத் தோட்டங்கள் அங்கே இருக்கின்றன. அங்கு 3 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கான குடியிருப்பும் அந்தப் பகுதியில்தான் அமைந்துள்ளது. அந்தப் பகுதியில் அரசுக்குச் சொந்தமான பள்ளிகள், அரசு மருத்துவமனைகள் எல்லாம் செயல்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல, புலிகள் காப்பகம் என்று அறிவித்துவிட்டால், அங்குள்ள மக்கள் வெளியேற்றப்பட்டுவிடுவார்கள். அதுமட்டுமல்லாமல், அங்கே பணியாற்றக்கூடிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுடைய

வேலை கேள்விக்குறியாகிவிடும். ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாயம் அங்கே பாதிக்கப்படும். எதிர்காலத்தில் புலிகள் ஊருக்குள் புகுந்தால், மக்களுடைய பாதுகாப்பும் கேள்விக்குறியாகிவிடும். கால்நடைகளுடைய உயிரிழப்பிற்கும் ஒரு வாய்ப்பு ஏற்பட்டுவிடும். இதுதொடர்பாக அந்தப் பகுதி மக்கள் கடந்த 6 மாத காலமாகத் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றார்கள். விவசாயிகளிடமோ, குடியிருப்புவாசிகளிடமோ, ஆதிவாசிகளிடமோ எந்தவிதமான கருத்தையும் கேட்காமல், அரசு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கின்றது. அதுமட்டுமல்ல, கிராம சபையினுடைய ஒப்புதலையும் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியை முடித்துவிடுகின்றேன். உரிய விதிமுறைகளைப் பின்பற்றாமல், விதிமுறைகளுக்கு மாறாக, மாவட்ட வனத் துறையும், மாவட்ட நிருவாகமும் மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. எனவே, தமிழக அரசு கன்னியாகுமரி மாவட்ட மக்களை வெகுவாகப் பாதிக்கும் புலிகள் சரணாலய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட அரசாணை எண் 201–ஐ இரத்து செய்து, மக்களைப் பாதுகாக்கும்படி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. பிரின்ஸ் பேசுகின்றீர்களா? (குறுக்கீடு) சரி, பேசுங்கள். (குறுக்கீடு) இரண்டுக்கும் ஒன்றாகச் சேர்த்து பதிலைச் சொல்லட்டும்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் Town Panchayat கூட தனியார் காடு வளர்ப்பு பாதுகாப்புச் சட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் இருக்கின்றது. அங்கு bus stand இருக்கக்கூடிய பகுதி, நகராட்சிப் பகுதிகள், நகர்மன்றப் பகுதிகள் எல்லாம் மக்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி. அவையெல்லாம் தனியார் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வருகின்றன. புலிகள் காப்பகத்தை அங்கே extend செய்தால் நிச்சயமாக பொது மக்களுக்குப் பாதிப்பு, விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பாதிப்பு, இரப்பர் தொழில் மற்றும் ஏனைய தொழில்களைச் செய்யக்கூடியவர்களுக்கு பாதிப்பு ஏற்படும். சமீபத்தில்கூட புலி தாக்கியதால் ஒருவர் இரண்டு

2018 ஜூலை 2] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

கண்களையும் இழந்திருக்கின்றார். இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 1,287 சதுர மைல்தான். இதில் 32 சதவிகிதம் வனப் பகுதி. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் வாழ வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் நான் இதைக் கேட்கின்றேன். அன்புக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்கின்றேன், அங்கே எத்தனை புலிகள் இருக்கின்றன என்ற கணக்கு உங்களிடம் இருக்கின்றதா? மத்திய அரசானது அதிகமான தொகையைத் தந்திருக்கின்றார்கள். களக்காடு, முண்டந்துறை பகுதியில் புலிகள் சரணாலயத்தைச் சரியாக அமைத்திருக்கின்றீர்களா? பொது மக்களின் பார்வைக்கு அதை வைக்கின்ற வகையில் உருப்படியாக ஏதாவது செய்திருக்கின்றீர்களா? ஆகவே, முண்டந்துறையோடு நிறுத்திவிடுங்கள். கன்னியாகுமரி பகுதிக்கு extend *செய்யக் கூடாது. பொதுமக்கள் முற்றிலுமாக பாதிக்கப்படுவார்கள். ஆகவே, அரசாணை எண் 201–ஐ அரசு இரத்து செய்ய வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பாதுகாக்க வேண்டும். மக்கள் சுபிட்சமாக வாழ வேண்டும். அதற்காக, நான் அரசின் கவனத்தை ஈர்த்து, அமர்கின்றேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆஸ்டின் அவர்களும், திரு. பிரின்ஸ் அவர்களும், கன்னியாகுமரி மாவட்டம், சுருளகோடு மற்றும் வீரப்புலி காப்புக் காட்டுப் பகுதிகளை களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தின்* buffer zone *ஆக அரசு அறிவிக்கும் முடிவால், அப்பகுதி மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டுள்ளதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் வழிகாட்டுதல்படி ஒவ்வொரு புலிகள் காப்பகத்திற்கும் வெளி மண்டலம் (Buffer Zone) *அறிவிக்கை செய்யப்பட வேண்டும் என்பது ஒரு நிபந்தனையாகும். அதனடிப்படையில், தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணைய கடித எண் 1–20/93–*PT (Part), *நாள் 18–1–2011–ல் களக்காடு, முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் வெளிமண்டலப் பகுதிகளாக குற்றாலம் காப்புக் காடு, கன்னியாகுமரி வன உயிரினச்*

சரணாலயத்தின் ஒரு பகுதி, களக்காடு, முண்டந்துறை புலிகள் காப்பகத்தை ஒட்டிய 5 கிலோ மீட்டர் கிழக்கு எல்லைப் பகுதி, மண்பொத்தை காப்புக் காடு, கொழுந்துமலை காப்புக் காடு பகுதிகளை உள்ளடக்கி 716.107 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு களக்காடு, முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் வெளிமண்டலப் பகுதியாக வன உயிரினப் (பாதுகாப்பு) சட்டம், 1972, பிரிவு 38 v–ன்படி தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் அங்கீகரித்துள்ளது.

ஆனால், தமிழக அரசு சாதக பாதகங்களை அறியவேண்டி, இதனைச் செயலாக்கம் செய்வதில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, மக்களின் நிலையை அறிய வேண்டும் என்பதற்காகவே, காலதாமதம் செய்ததால், மாண்பமை உச்ச நீதிமன்றம், சிவில் வழக்கு 21339/2011, 3–4–2012 ஆம் நாளிட்ட ஆணையில், 2006 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட வன உயிரியல் சட்டம், 1972–ன்படி, இந்தியாவில் தமிழகம் உட்பட 10 மாநிலங்களில் புலிகள் காப்பகங்களுக்கு வெளி மண்டலம் (Buffer Zone) மிக விரைவில், மூன்று மாதங்களுக்குள் அறிவிக்க வேண்டுமென உத்தரவிட்டது. இருப்பினும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, பொது மக்களின் நலன் கருதி, வெளி மண்டலப் பகுதிகளின் சாதக, பாதகங்களை தமிழக அரசு ஆய்வு செய்ததில் காலதாமதம் ஆனதால், மாண்பமை உச்ச நீதிமன்றம் மறுபடியும் வெளி மண்டலப் பகுதியை (Buffer Zone) மூன்று வாரங்களுக்குள் அமைக்கவில்லையெனில், நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையுடன் ரூ.50,000/– அபராதம் விதிக்கப்படும் என்று 24–7–2012 ஆம் நாளைய ஆணையில் கடுமையாக எச்சரித்தது. எனவேதான், தமிழக அரசு 13–8–2012 ஆம் நாளன்று வெளி மண்டலப் பகுதியை, மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்ட சுருளகோடு வெளி மண்டலப் பகுதிக்குள் வராததால் இப்பகுதியைத் தவிர்த்து, வீரப்புலி பகுதியுடன் சேர்த்து அறிவிக்கை செய்யப்பட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளி மண்டலப் பகுதிகள் என்பது, பல்வகை உபயோகப் பகுதிகளோடு புலிகள் வாழும் பகுதிகளுக்கும், மனிதர்கள் வாழும் பகுதிகளுக்கும் இடைப்பட்ட பகுதிகளாகும். களக்காடு, முண்டந்துறை புலிகள் சரணாலயம் தமிழகத்தின் முதல் புலிகள் சரணாலயம் என்பதோடு, இந்தியாவின் பதினேழாவது புலிகள்

2018 ஜூலை 2] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

காப்பகமாக 1988 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. மேலும், இந்த வெளி மண்டலப் பகுதியானது களக்காடு புலிகள் சரணாலயத்திற்கு மட்டுமின்றி, தமிழகத்திலுள்ள ஆனைமலை, முதுமலை புலிகள் சரணாலயங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. புலிகள் காப்பக வெளி மண்டலப் பகுதியாக அறிவிக்கை செய்யப்படுவது பொது மக்களை எந்த விதத்திலும் பாதிக்காத அளவிற்கு நிலைமை இருப்பதனால்தான், இந்த வெளி மண்டலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகள்மூலம் அவர்கள் அதிகம் பயன்பெறுவது உறுதி செய்யப்படுகிறது. வெளி மண்டலப் பகுதிகள் (Buffer zone) பல்வகை உபயோகப் பகுதிகள் என்பதால், புலிகள் காப்பக நிருவாகத்தில் பல்வேறு துறைகளின் பணிகளையும் ஒருங்கிணைப்பதன்மூலம் இப்பகுதியில் வாழும் பொது மக்களின் வாழ்வாதார வாய்ப்புகளுக்கு வனப் பகுதியைச் சார்ந்திருக்காமல் பல்வேறு மாற்றுத் தொழில்கள் மற்றும் வருவாயைப் பெருக்க அந்தந்த கிராம மக்களை உள்ளடக்கிய சுற்றுச்சூழல் சார்ந்த சுற்றுலா eco–tourismபோன்ற நடவடிக்கைகளை மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்த இயலும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 4 தினங்களுக்கு முன்பாக மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள், மக்கள் அனைவருக்கும் பயன்தருகிற விவரங்களை அறிந்து, மக்கள் பயன்பெற வேண்டுமென்று, eco–tourism குறித்து கொள்கை விளக்கக் குறிப்பில் வெளியிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10–20

கடந்த 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரை சுமார் 55 இலட்சம் ரூபாய் இப்பகுதிக்காகச் செலவிடப்பட்டுள்ளது. மேலும், இம்மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக தேனீ வளர்ப்பு, ஓட்டுநர் பயிற்சி, தையல் பயிற்சி மற்றும் வருமானம் கிடைக்கக்கூடிய தொழில்களை மேற்கொள்ள 1,225 கிராம மக்களுக்கும் மேலாகக் கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. கீழ்கோதையாறு மற்றும் பாலிகேசப் பகுதிகளில் இயற்கைச் சூழல் சுற்றுலாப் பயணிகளைக் கவர பணிகள் மேற்கொள்ளப்பட்டு, உள்ளூர் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, எந்தப் பாதிப்பும் அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு இல்லை என்பது இந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது.

[திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்] [2018 ஜூலை 2

கன்னியாகுமரி மாவட்டத்தின் களக்காடு, முண்டந்துறை ஆகியவற்றின் சில பகுதிகள் புலிகள் காப்பகத்தின் வெளிமண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளதால் இங்குள்ள மக்களுக்குப் பாதிப்புகள் எதுவும் ஏற்பட வாய்ப்புகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. மானியக் கோரிக்கைகள், 2018–2019, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

(ஆ) கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை—

—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018–2019 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும். 29–6–2018 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதத்திற்குப் பதிலுரையும், வாக்கெடுப்பும். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தங்களது பதிலுரையை வழங்குவார்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கைமீதான பதிலுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகி, அனைத்துமாகி, அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் வாழும் எங்கள் ஆனந்த ஜோதியே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

சுடர்விடும் சோலை மலரொளியே, சுந்தரப் புன்னகையே, நீலக் கடல் அலையே, கோலக் குயிலின் குரலோசையே அம்மா, காலங்களின் வசந்தமே, கர்மத்தின் வீரமே, கலைகளின் ஓவியமே, மணத்தில் சந்தனமே, மாதர்குல திலகமே அம்மா! அறிவுத் திறமே, ஆற்றலின் உருவமே, அஞ்சாத சிங்கமே,